1924 - 2024

## சுருக்கம்

பணி- தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திருமதி.A.தஸ்லிமாபானு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டது - உரிய விதிகளைத் தளர்த்தி பணி வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

அரசாணை (ப) எண்.363

நாள் 24.11.2023

சோபகிருது, கார்த்திகை - 08,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (கியூ) துறை, நாள். 23.01.2020.
2. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.17301/கே2/2016, நாள் 16.12.2021.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.17301/கே2/2016, நாள் 18.05.2021 மற்றும் 12.06.2023.

---

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், நாகப்பட்டினம் பதிவு மாவட்டம் நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தபோது 29.03.2015 அன்று பணியிடை மரணமடைந்த திரு.அ.அப்துல்சுக்கூர், என்பவரின் மனைவி திருமதி.A.சுஹாரா என்பவரால் தனது மகள் திருமதி.A.தஸ்லிமாபானு என்பவருக்கு கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரியும், திருமதி.A.தஸ்லிமாபானு என்பவரால் தனக்கு கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரியும் 19.11.2015 நாளிட்டு மனுக்கள் அளிக்கப்பட்டது என்றும், அவரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், திருமதி.A.தஸ்லிமாபானு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகளின்படி, அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திருச்சி பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர், 24.12.2021 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருவதாக தெரிவித்து அவரது தற்காலிகப் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்துவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. நாகப்பட்டினம் பதிவு மாவட்டம் நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிகையில் 20.03.2015 அன்று பணியிடை மரணமடைந்த திரு.A.அப்துல்கக்கூர் என்பாரது மகள் திருமதி.A.தஸ்லிமாபானு என்பவர் கருணையடிப்படையிலான பணிநியமன நாளன்று திருமணமானவர் என்பதால், 2016-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 15-லை தளர்வு செய்து பதிவுத்துறையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து அவர் பணியேற்பு செய்துள்ள 24.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுபெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 58-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, இறந்த அரசு ஊழியரின் திருமணமான மகள் திருமதி.A.தஸ்லிமாபானு என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு அவர் பணியேற்ற நாள் முதல் அவரது பணியினை வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, தனியர் பொருட்டு 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 15-ஐ தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

4. இவ்வாணை, மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண் 5211153/ஜி2/2023, நாள் 04.09.2023 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28. (தி)

திருமதி.A.தஸ்லிமாபானு, இளநிலை உதவியாளர்,
திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறை தலைவர், சென்னை 28வழியாக)

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/2023
பிரிவு அலுவலர்